1971 டிசம்பர் 15]

பஞ்சாலைத் தொழிலாளர் திராவிட முன்னேற்ற சங்கம் மதுரை பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம், மதுரை மாவட்டக் கூட்டு பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றுக்கும் மதுரையில் சுமார் 1,000 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள 146 விசைத்தறிப் பிரிவுகளின் நிர்வாகத்தினருக்கும் இடையே கீழ்க்காணும் பிரச்சனைகள் குறித்து தொழிற் தகராறு ஏற்பட்டது :—

(1) பல்வேறு வகைத் தொழிலாளர்க்கு இடைக்காலத் துயர் தணிப்புத் தொகை கொடுக்கவேண்டும்.

(2) மொத்த ஊதியத்தில் 20 சதவீதத்தைப் பூரிப்பு ஊதியமாக கொடுக்க வேண்டும்.

(3) தேசிய பண்டிகை விடுமுறைகள் சட்டத்தைச் செயல் படுத்துதல், தற்செயல் விடுப்பு அளித்தல் ஆகியவற்றை நிறை வேற்ற வேண்டும்.

(4) தொழிலாளர் சட்டு அநி வருங்கால வைப்புநிதிச் சட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்.

இக்கோரிக்கைகள் குறித்து மதுரை, தொழிலாளர் நல அதிகாரி-1 முன்பு பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக் கையில், தொழிலாளர்கள் 2—9—1971 முதல் வேலைநிறுத்தத்தை மேற்கொண்டனர்.

(இ) ஆம், ஊதியங்களைத் திருத்தியமைப்பது தொடர்பான பிரச்சினை குறித்து மதுரை, தொழிலாளர் நல ஆணையர்-1 முன்பு 25—9—1971 அன்று 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் உடன்பாடு ஏற்பட்டது.

அரசு அச்சகத்தொழிலாளர்களுக்கு நிகராடை

*409 வினு.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு தொழி லாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு அச்சகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சீர் உடை வழங்கும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் என்றால், எப்பொழுது ?

மாண்புமிகு திரு என். வி. நடராசன் : (அ) இல்லை.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

திருவள்ளுவர் ஆண்டு

*** 410 வினு.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

திருவள்ளுவர் ஆண்டினை அரசாங்கம் பதிவேடுகளிலும் பழக்கத்தில் கொண்டு வா அரசு ஆணை பிறப்பிக்கும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இல்லை.